SACRIFICE
316

# ஜீவ பலி

*"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்."* ரோமர் 12:1-2

**உங்களுடைய பலி.** உங்களுடைய சரீரத்தை *"பரிசுத்தமுள்ள ஜீவபலியாக"* ஒப்புக்கொடுக்கும்படியான இந்த உபதேசம் பெரும்பாலும் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. இருப்பினும், இயேசு கிறிஸ்துவில் ஒரு சாதாரண விசுவாசியாக இருக்காமல் மேம்பட்டவராக இருப்பதற்கான சரியான வழியை உங்களுக்குக் காண்பிப்பதில் இது மிகவும் முக்கியமானது. இரட்சிப்பிற்குப் பிறகு ஒவ்வொரு விசுவாசியும் தேவனுக்கு ஒரு விசேஷித்த பலியைச் செலுத்தும்படி முதல் வசனம் சவால் விடுகிறது. அந்தப் பலி செலுத்திய பிறகுள்ள வாழ்க்கைக்குரிய வழிமுறைகளை இரண்டாம் வசனம் தருகிறது. உங்கள் சிலுவையை அனுதினமும் சுமப்பதன் ஒரு பகுதியாக, ஒவ்வொரு நாளும் தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள், லூக்கா 9:23. இருப்பினும், ரோமர் 12:1-இன் நோக்கம் அதுவல்ல. *"உங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுங்கள்"* என்ற அதன் கட்டளை, தேவனுக்கு *என்றென்றைக்குமான* அர்ப்பணிப்பு, சமர்ப்பணம் மற்றும் முழுமையான கீழ்ப்படிதலை நிறைவேற்றுவதாகும். அது இரட்சிப்பு அல்ல. இரட்சிப்பு என்பது கிறிஸ்துவின் பலியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. இது வேறுபட்டது. இது உங்களுடைய பலி. அது அனுதின பலி அல்ல. அது உங்கள் வாழ்க்கையை நிபந்தனையின்றியும் நிரந்தரமாகவும், ஜீவனுள்ள, பரிசுத்தமான, உகந்த பலியாக தேவனுக்கு அர்ப்பணிப்பதாகும். அது தேவனுடைய மகிமைக்காகவும், அவருடைய வரையறையற்ற பயன்பாட்டிற்காகவும், உங்களையே நீங்கள் மனமுவந்து அவருக்கு அளிக்கும் பரிசாகும்.

**இந்த பலியை ஏன் செலுத்த வேண்டும்?** அவருடைய இரக்கங்களினிமித்தமே. ரோமர் 1-11 அதிகாரங்கள் தேவனுடைய இரக்கங்களை விவரிக்கின்றன. அந்த இரக்கங்களினிமித்தம் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை ரோமர் 12:1 உங்களுக்குச் சொல்கிறது. உங்களுடைய பலியைச் செலுத்திய *பிறகுள்ள* வாழ்க்கைக்கான இரண்டு உபதேசங்களை ரோமர் 12:2 உங்களுக்கு வழங்குகிறது. உங்களை இரட்சிப்பதிலும் பரிசுத்தப்படுத்துவதிலும் காட்டப்படும் தேவனுடைய மாபெரும் இரக்கங்கள், முதல் பதினொரு அதிகாரங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. ஆகையால், தேவனுக்கு உங்களை அர்ப்பணியுங்கள். இவ்வாழ்க்கையிலும் நித்தியத்திலும் அவர் உங்களை ஆசீர்வதிப்பார். இருப்பினும், நீங்கள் பலி செலுத்த வேண்டிய சரியான உந்துதல் உங்களுக்கு முன்பாக இருப்பதில்லை. அது உங்களுக்குப் பின்னால் இருக்கிறது. உங்கள் சரியான உந்துதல், தேவன் ஏற்கனவே செய்து முடித்ததை அடிப்படையாகக் கொண்டது. இயேசு தம்முடைய ஆணி பாய்ந்த தழும்புகள் உள்ள கரங்களை உங்களுக்கு முன் காண்பித்து, "நான் உனக்காகச் செய்தவை எல்லாவற்றின் காரணமாக எனக்காக இதைச் செய்" என்று சொல்வதைக் கற்பனை செய்து பாருங்கள். அதுவே ரோமர் 12:1-இன் அர்த்தமாகும்.

**ஒரே தரம் செலுத்தப்படும் பலி ஏன் செலுத்தப்பட வேண்டும்?** ஏன் என்றால், ரோமர் 12:1-2-ல் உள்ள வார்த்தைகளின் அர்த்தம் அதுதான். 12:2-ல் உள்ள *"ஒத்த வேஷந்தரியாதிருங்கள்"* மற்றும் *"மறுரூபமாகுங்கள்"* ஆகிய வினைச்சொற்கள் நிகழ்காலத்தில் உள்ளன. அதாவது, அந்த இரண்டு காரியங்களையும் இப்பொழுது செய்வதுடன், உங்கள் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து செய்யுங்கள். இருப்பினும், 12:1-ல் உள்ள *"உங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுங்கள்"* என்ற வினைச்சொல் கிரேக்க மொழியில் எளிய நிகழ்காலத்தில் இல்லை. கிரேக்க மொழியில், அது ஒற்றைச் செயலைக் குறிக்கிறது. அதன் பொருள், அதைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பதல்ல. அதன் பொருள், என்றென்றைக்குமாக ஒரே முறை அதைச் செய்ய வேண்டும் என்பதே. அது தேவனுக்கு உங்களை உறுதியாக அர்ப்பணிப்பதாகும். அவருக்கு உங்களைப் பலியாக ஒப்புக்கொடுங்கள். ரோமர் 12:1 உங்களுடைய பலியைக் குறித்தது. அது உங்களை தேவனுடைய சந்நிதியில் நிரந்தரமாகப் படைப்பதைப் பற்றியது.

**இரண்டு உதாரணங்கள்.** உபாகமம் 15:12-17 இதற்கு ஒரு உதாரணத்தை வழங்குகிறது. விடுவிக்கப்பட்ட ஒரு எபிரெய அடிமை, *தானாகமற்றும் நிரந்தரமாக* தன் எஜமானுக்குத் தன்னை மீண்டும் அடிமையாக்கிக் கொள்ள முடிவு செய்யலாம். அந்தத் தெரிவு, அந்த எஜமானின் கடந்தகால இரக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. அது அந்த அடிமைக்குத் தன் எஜமான் மீது இருந்த அன்பினால் தூண்டப்பட்டதாகும். அது நிரந்தரமானது. தன் வாழ்நாள் முழுவதும் அவன் அந்த எஜமானின் ஊழியன் என்பதைக் குறிக்கும் வகையில், ஒரு கம்பியால் அந்த அடிமையின் காதில் குத்தப்பட்டது. இந்த அடிமைத்தனம் அவ்வடிமையின் தெரிவாக இருந்தது. அது அவன் மீது திணிக்கப்படவில்லை. அது ஒரு நிரந்தரமான முடிவு. மற்றொரு எடுத்துக்காட்டு, பழைய உடன்படிக்கையின் மிருக பலிகளில் உள்ளது. பலிபீடத்தில் வைக்கப்படுவதற்கு அம்மிருகம் உகந்ததாக இருக்க வேண்டும். நோயுற்ற அல்லது குறைபாடுள்ள மிருகம் உகந்ததல்ல, லேவியராகமம் 1-5. ரோமர் 12:1-ல் சொல்லப்பட்டுள்ள உங்களுடைய பலியின் பரிசுத்தமுள்ள, ஏற்றுக்கொள்ளப்படத் தகுதியான பகுதியை இது விளக்குகிறது. பலியிடப்பட்ட மிருகத்தின் மரணம், அப்பலியின் நிரந்தரத்தன்மையை விளக்குகிறது. பலிபீடம் சூடானபோது, பலியிடப்பட்ட எந்த மிருகமும் அதிலிருந்து தவழ்ந்து வெளியே சென்றதில்லை. நாளின் முடிவில், எந்த ஒரு ஆசாரியனும் மற்றொரு நாளில் பலியிட்டுக்கொள்வதற்காக எந்த ஒரு மிருகத்தையும் திரும்ப எடுத்துச் சென்றதில்லை. அது ஒரு நிரந்தரமான பலியாக இருந்தது. ரோமர் 12:1-ல் கூறப்பட்ட உங்களுடைய பலி, பலிபீடம் சூடானதும் அதிலிருந்து வெளியில் எடுக்கப்பட்டால், அது ஒருபோதும் ரோமர் 12:1-ல் கூறப்பட்ட பலியாக இருக்காது.

**உங்களுடைய பலியை மீண்டும் செலுத்துதல்.** ரோமர் 12:1-ல் சொல்லப்பட்டுள்ள உங்களுடைய பலியை நீங்கள் எப்போதாவது மீண்டும் செலுத்த வேண்டியதிருக்குமா? ஆம், உங்கள் பலி உகந்ததாக இல்லாத பட்சத்தில் மீண்டும் செலுத்த வேண்டியதாகும். ரோமர் 12:1-ன் படியான பலி, உயிருள்ளதாகவும், பரிசுத்தமுள்ளதாகவும், உகந்ததாகவும் இருக்க வேண்டும். கிறிஸ்துவை விசுவாசித்ததால், நீங்கள் *“மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறீர்கள்.”* யோவான் 5:24. பரிசுத்தமுள்ள பலியாக இருப்பது உங்கள் பொறுப்பு. பழைய ஏற்பாட்டு மிருகங்கள் பலியிடப்படுவதற்கு உகந்தவையாக இருக்க வேண்டியிருந்தது. எந்த மிருகமும் பரிபூரணமானதாக இருக்க முடியாது. எனினும் அது நோயற்றதாகவும், ஆரோக்கியமாகவும், பழுதற்றதாகவும் இருக்க வேண்டும். இது ரோமர் 12:1-ன் படியான ஒரு பலிக்குத் தேவையான இரண்டு காரியங்களை விளக்குகிறது. முதலாவதாக, உங்களுடைய பலி பிணியற்றதாக இருக்க வேண்டும். பாவம் மற்றும் தேவனிடமிருந்து பிரிதல் எனும் பிணி இரட்சிப்பினால் குணப்படுத்தப்பட வேண்டும். இக்காரணத்தால், ரோமர் 12:1 விசுவாசிகளுக்கு மட்டுமே எழுதப்பட்டுள்ளது (அந்த வசனத்தில் உள்ள “சகோதரர்கள்” என்ற வார்த்தையால் இது குறிக்கப்படுகிறது). விசுவாசி அல்லாதவரின் பலி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல, ஏனெனில் அது இரட்சிப்புக்கு *முன்னர்* அல்ல, இரட்சிப்புக்குப் *பின்னரே* செலுத்தப்பட வேண்டும். நீங்கள் இயேசுவைப் பின்பற்றுவதற்கு முன்பு அவரிடம் வர வேண்டும். உங்கள் இரட்சிப்பை உறுதிப்படுத்திக்கொள்ள, www.Gospel316.org என்ற இணையதளத்தைப் பார்வையிடவும். பரிசுத்தமுள்ள பகுதி என்பது ஒரு விசுவாசியின் வாழ்க்கைக்கு ஏற்புடைய ஆவிக்குரிய தூய்மையைக் குறிக்கிறது. அப்பொழுதுதான் ரோமர் 12:1 குறிப்பிடும் உங்களுடைய பலி தேவனுக்கு உகந்ததாக இருக்கும். *“ஆகையால் ஒருவன் இவைகளைவிட்டு, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும் எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்,”* 2 தீமோத்தேயு 2:20. நீங்கள் பரிபூரணமானவராக இருக்க முடியாது. இருப்பினும், நீங்கள் உகந்த அளவிலான ஆவிக்குரிய ஆரோக்கியத்திலும் பரிசுத்தத்திலும் உங்களை அர்ப்பணிக்க முடியும். உங்கள் பரிசுத்தமுள்ள ஜீவபலி தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, நீங்கள் அதை மீண்டும் செலுத்த வேண்டியதில்லை. இருப்பினும், உங்கள் பலி தற்காலிகமானதாக இருந்த காரணத்தினாலோ அல்லது பரிசுத்தமானதாக இல்லாத காரணத்தினாலோ தேவனுக்கு உகந்ததாக இல்லை என்றால், அதை மீண்டும் செலுத்துவது அவசியம். ஒரு நிரந்தரமான, ஜீவனுள்ள, பரிசுத்தமுள்ள பலியாக உங்களை அர்ப்பணியுங்கள். உங்களை நிரந்தரமாக மனமுவந்து தேவனுக்கு அடிமைப்படுத்துங்கள். அதை ஏனோ தானோ என்று செய்யாதீர்கள். இது இரட்சிப்பிற்குப் பிறகு எடுக்கப்படும் மிகத் தீவிரமான முடிவு. உங்களுடைய பலி ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, இயேசு கிறிஸ்துவின் உண்மையான சீடராக, ரோமர் 12:2-ல் கூறப்பட்டுள்ளபடி, ஒத்த வேஷந்தரியாத, உங்களை மாற்றியமைக்கும் வாழ்க்கையைத் தொடருங்கள். அவர் உங்களுக்காகச் செய்த அனைத்தின் காரணமாகவும் அவருக்கென இதைச் செய்யுங்கள்!

**உங்களுடைய பலிக்குப் பிறகான வாழ்க்கை.** *“நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்,”* ரோமர் 12:2. இந்த வசனம், ரோமர் 12:1 குறிப்பிடும் உங்களுடைய பலிக்குப் பிறகான வாழ்க்கைக்கான அறிவுரைகளை வழங்குகிறது. இந்த அறிவுரைகள் நிகழ்காலத்தில் உள்ளன; அதாவது, இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், உங்கள் மனம் புதிதாகிக் கொண்டிருக்கிறதினால் மறுரூபமாகிக்கொண்டிருங்கள். இவ்வுலகின் பாவச் செயல்களுக்கு ஒத்துப்போகாதிருங்கள், அவற்றுக்கு இணங்காதிருங்கள்.. ஒரு விசுவாசியாக நீங்கள் யார் என்பதை உலகம் உருவாக்க அனுமதிக்காதீர்கள். *“உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்,” என்று ரோமர் 12:2 அறிவுறுத்துகிறது. மறுரூபமாதல்* என்று மொழிபெயர்க்கப்பட்ட [கிரேக்க வார்த்தை, மத்தேயு 17:2 மற்றும் மாற்கு 9:2-ல் இயேசுவைக் குறித்துப் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையாகும், அங்கு அவர் மறுரூபமானார் என்று கூறப்பட்டுள்ளது. ரோமர் 12:2, உங்கள் மனம் புதிதாகிறதினாலே (புனரமைப்பு, சிறந்த முழுமையான மாற்றம்) உருமாற்றம் அடைய வேண்டும் என்ற ஒரு அறிவுரையாகும். அந்த உருமாற்றம் (ஒரு கம்பளிப்புழு பட்டாம்பூச்சியாக மாறுவதை விடவும் அதிக விசேஷமானது) நீங்கள் தேவனுடைய வார்த்தையைக் கற்று அதன்படி வாழும்போது நிறைவேற்றப்படுகிறது. ரோமர் 12:1-ல் உள்ளபடி உங்களுடைய பலியைச் செலுத்துங்கள். உலகத்தின் வார்ப்புக்குள் திணிக்கப்படாதீர்கள். தேவனுடைய வார்த்தையைக் கற்று அதன்படி வாழ்ந்து மறுரூபப்படுங்கள். அப்பொழுது நீங்கள் தேவனுடைய சித்தத்தைப் பகுத்தறிந்து அதன்படி வாழ முடியும்.

**“தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக.”**
**ரோமர் 12:2**

*ஜீவ பலி* © 2026 ஜான் டி. மோரிஸ் III அவர்களால் ஆக்ட்ஸ் ஒன் எய்ட் (Acts One Eight) மூலம் வெளியிடப்பட்டது. அதன் பொருளடக்கத்தை மாற்றாமல், இந்த முழுமையான அறிக்கையுடன் நீங்கள் இதை அச்சிடவோ, நகலெடுக்கவோ, பதிவிடவோ, மின்னஞ்சல் அனுப்பவோ அல்லது குறுஞ்செய்தியாக அனுப்பவோ செய்யலாம். முதல் பக்கத்தின் மேலே உங்கள் ஊழியம் அல்லது திருச்சபையின் பெயர் அல்லது சின்னத்தைச் சேர்க்கலாம் மற்றும் இரண்டாம் பக்கத்தின் கீழே உள்ள கோட்டிற்கு மேலே உங்கள் தொடர்புத் தகவலைச் சேர்க்கலாம். *Sacrifice316* வேதாகமத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. இயேசுவை விசுவாசிப்பவராக மட்டும் இல்லாமல், மக்கள் ஆவிக்குரிய ரீதியில் வளரவும் உதவுவதே இதன் நோக்கம். நீங்கள் ஆக்ட்ஸ் ஒன் எய்ட்-க்கு (முடிந்தால் ஆங்கிலத்தில்) Hello@Mail316.org. என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யலாம். மொழிபெயர்ப்பு சேவைகள் www.ChristianLingua.com. மூலம் வழங்கப்பட்டன. *ஜீவ பலி* 48 மொழிகளில் இலவசமாக www.Sacrifice316.org. இல் கிடைக்கிறது. ஆங்கிலப் பதிப்பில் உள்ள மேற்கோள்கள் தி லாக்மேன் ஃபவுண்டேஷனின் நியூ அமெரிக்கன் ஸ்டாண்டர்ட் வேதாகமம் 1995-இலிருந்து எடுக்கப்பட்டவை. இந்த மொழிபெயர்ப்பில் உள்ள வேதாகம மேற்கோள்கள் பழைய தமிழ் பரிசுத்த வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவை.